சுருக்கம்

விடுமுறை – தீபாவளி பண்டிகையை முன்னிட்டு – தீபாவளிக்கு அடுத்த நாள் 28.10.2019 திங்கட்கிழமை தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களுக்கும் உள்ளூர் விடுமுறை – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொது (பல்வகை)த் துறை

அரசாணை (டி) எண். 516

நாள்: 21.10.2019
விகாரி, ஐப்பசி – 4
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண்.154, பொது(பல்வகை)த் துறை, நாள் 03.09.2009.
2. அரசு கடித எண்.8585/பல்வகை/2013–7, பொது (பல்வகை)த் துறை, நாள் 21.02.2014.
3. பல்தரப்பு கோரிக்கைகள் .

******

ஆணை:-

27.10.2019 அன்று தீபாவளி பண்டிகையை தங்களது சொந்த ஊருக்குச் சென்று மகிழ்வுடன் கொண்டாட ஏதுவாக, 28.10.2019 திங்கட்கிழமை தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு அலுவலகங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு உள்ளூர் விடுமுறை அளிக்குமாறு பலதரப்பிலிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றன.

2. அக்கோரிக்கைகளை அரசு கவனமுடன் பரிசீலித்து, தீபாவளிக்கு அடுத்த நாள் 28.10.2019 திங்கட்கிழமை தமிழ்நாடு முழுவதும் உள்ள மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கு உள்ளூர் விடுமுறை அளித்தும், அவ்விடுமுறையை ஈடு செய்யும் வகையில் 09.11.2019 (இரண்டாம் சனிக்கிழமை) அன்று பணிநாளாக அறிவித்தும் ஆணை வெளியிடப்படுகிறது.

3. மேற்கண்ட உள்ளூர் விடுமுறை தினமானது செலாவணி முறிச்சட்டம் 1881 (Under Negotiable Instruments Act, 1881)-ன் கீழ் அறிவிக்கப்படவில்லை என்பதால், அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கருவூலம், சார்நிலைக் கருவூலங்களும் குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்பட தகுந்த ஏற்பாடு செய்யுமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. செந்தில்குமார்
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ)

**பெறுநர்**
அனைத்துத் துறை செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை-9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.
தனி அலுவலர், முதலமைச்சரின் தனிப்பிரிவு, சென்னை-9.
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.
**நகல்**
உதிரி/இருப்பு கோப்பு

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

இரா. தலைமணி 21/10/2019
பிரிவு அலுவலர்
21/10/2019

RC (A4) 21459/2019, Dated: 23.10.2019

Copy communicated to all district officers in Vellore district for information and necessary action

B. [signature] 23/10/19
For Collector
Vellore District
Vellore-9

To
23/10/19
All officers in Vellore District